1974 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனிப்பட்ட விவசாயிகள் யாரும் டீசல் எஞ்சின் வாங்கி வைத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை. அப்படி வாங்கிக் கொள்வதன் மூலமாக கடன் கொடுக்கும்போது சற்றுக் காலதாமதமாகிறது. டீசல் எஞ்சினை சொந்தமாக வாங்கி வைத்துக்கொண்டு அந்தப் பம்புகளை இயக்குவதில் அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

Agro-Industries Corporation aid for fisheries

* 541 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the financial assistance offered by the Tamil Nadu Agro-Industries Corporation towards the development of fisheries in the State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நிதி உதவி எதுவும் செய்யவில்லை.

செயற்கை முறை கருத்தரிப்புத் திட்டம்

* 542 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :**
திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பால் மாடுகள் வைத்துள்ளவர்களின் வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்புப் பணி செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஒரு விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த இனவிருத்தி முறை தற்போது சென்னை மாநகரத்திலே மட்டுந்தான் நடைமுறைப் படுத்தப்படுவது எந்த அளவுக்கு வெற்றி பெற்று வருகிறது ? மாவட்ட அளவில் எப்போது விரிவுபடுத்தப்படும் ?

@ 213-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.